# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 443/2016
# வழக்கு சாட்சி PW-5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கப்பாண்டி | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | சுந்தரேசபுரம் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 20th, 2025.

**(2, 4, 6, 7, 8 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சுந்தரேசபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது டிரைவராக வேலை செய்து வருகிறேன். 2013ம் வருடம் நான் பால் வியாபாரம் செய்து வந்தேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை எனக்கு தெரியும். 15.02.2013ம் தேதி, இரவு 09.00 மணிக்கு நான் பால் கொடுத்து விட்டு கிளம்பும் போது காவேரி சுப்பையாபாண்டியன் வீட்டிற்கு அருகில் கும்பலாக உள்ளே வராண்டாவில் வெட்டணும், குத்தனும் இன்று விடக்கூடாது என்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் மருதையாபாண்டியன் வீட்டில் பால் கொடுத்து விட்டு, வீட்டிற்கு போய் விட்டேன். நான் பால் கேனை எனது வீட்டிற்கு வெளியே எடுத்து வைத்துகொண்டிருக்கும்போது, கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு தெருவில் ஒரு கார் வேகமாக மருதையாபாண்டியன் வீட்டை நோக்கி வந்தது. நானும் அந்த காரின்

பின்னாலேயே போனேன். மருதையா பாண்டியன் வீட்டிற்கு முன்னால் பெரிய கேட் இருந்தது. அந்த கேட்டிற்குள் கார் உள்ளே போக முடியாத அளவிற்கு 4, 5 இருசக்கரவாகனத்தை நிறுத்தி வைத்திருந்தார்கள்.

மருதையா பாண்டியனின் கார் வீட்டிற்குள் போகமுடியாத அளவிற்கு எதிரிகள் பைக்கை நிறுத்தி விட்டார்கள். அதனால் மருதையாபாண்டியனின் கார் வீட்டிற்குள் போக முடியாமல் வெளியே நிறுத்தினார்கள். அப்போது எதிரி சதீஷ்குமார் கல்லை எடுத்து காரின் முன்பக்க கண்ணாடியில் எறிந்தார். அப்போது காரை ஓட்டிய ராஜேந்திரன் என்பவரும் முன்பக்கமிருந்த மருதையா பாண்டியன் என்பவரும் காரிலிருந்து வெளியே இறங்கினார்கள். அப்போது சதீஷ்குமார் கல்லை எடுத்து மருதையாபாண்டியனின் நெற்றியில் எறிந்தார்.

எதிரி இசக்கிபாண்டியன் கம்பியால் மருதையாபாண்டியனின் நெற்றியில் அடித்தார். அப்போது ராஜேந்திரன் இறங்கி வந்து அதை தடுக்க போனபோது எதிரி குமார் ராஜேந்திரனின் கையையும், சட்டையையும் பிடித்து தள்ளு முள்ளு நடந்தது. அப்போது எதிரி இசக்கிபாண்டியன் கம்பியால் ராஜேந்திரனின் தலையின் பின்புறம் அடித்தார். எதிரிகள் அடித்ததில் மருதையாபாண்டியன் கீழே விழுந்தார். அப்போது மருதையாபாண்டியனின் மருமகள் சண்முகப்பிரியா வந்து எனது மாமனாரையும், கணவரையும் அடிக்காதீங்க, அடிக்காதீங்க, யாராவது காப்பாத்துங்க என்று சத்தம் போட்டார். மருதையாபாண்டியன் கீழே படுத்திருந்தார். அவரை இசக்கிபாண்டியனின் மாமனார் சுப்பையாபாண்டியன் என்பவர் "நீ இருந்தால் தானே Petition போடுவே, சாவு" என்று சொல்லி தென்னை மட்டையால் மருதையாபாண்டியனை

அடித்தார், காலால் மிதித்தார். அப்போது சுற்றி நின்று கொண்டிருந்த பெண்கள் காப்பாற்ற வந்தார்கள். அப்போது சுற்றி நின்றவர்களை பார்த்து காவேரி சுப்பையாபாண்டியன் என்பவர் யாரும் தடுக்காதீங்க, செத்து தொலையட்டும் என்று சொன்னார். அதனால் யாரும் பக்கத்தில் வரவில்லை.

அப்போது காயம்பட்ட இருவரும் மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்தார்கள். அப்போது தலையாரி தங்கராஜ் என்பவர் கிழட்டு பய செத்து போயிட்டான், எல்லோரும் ஓடிடுங்க என்று சொல்லவும் எல்லோரும் நிறுத்தி வைத்திருந்த பைக்கை எடுத்து கொண்டு வடக்கு நோக்கி போய் விட்டார்கள். நான் பிரச்சனையை ஓரமாக நின்று பார்த்து கொண்டிருந்தேன். நான் எனது அப்பா தங்கபாண்டியனுக்கு போன் செய்தேன். தங்கபாண்டியன், தமிழ், சீத்தா, சரவணன் ஆகியோர்கள் காயம்பட்ட இருவரையும் காரில் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:55:39 +0530